திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அதைப் பராமரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்புவார்களானால் நிச்சயமாக நடைமுறைகளை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சிலை வைக்கப்பட்டது என்றாலும் சிலை வைக்கப்பட்டதற்குப் பின்னாலே அது பொதுச்சொத்தாக ஆகிவிடுகிறது. ஆளுங்கட்சி அண்ணா அவர்களை பொதுச்சொத்தாக வைத்திருப்பதாகச் சொல்கிறது, அண்ணா அவர்களின் சிலைக்கு அதைப் பராமரிக்க வேண்டும் என்று பிண்ணப்பம் வந்தால்தான் பரிசீலிக்கப்படும் என்று சொல்வது இந்த அரசாங்கத்தின் நோக்கத்திற்கு ஏற்றதுதானா? ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கை இல்லாமலேயே அண்ணா அவர்களின் சிலையைப் பராமரிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதையே கோரிக்கையாக ஏற்று அரசு பரிசீலிக்கும்.

பனங்குடி பஞ்சாயத்தில் உள்ள புறம்போக்கு நிலம்.

*வினா எண் 307 —திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமருகல் ஒன்றியத்தின் பனங்குடி பஞ்சாயத்தில் உள்ள ஏரிப்புறம்போக்கை நீண்டகாலமாக அனுபவித்து வருபவர்கள் பட்டா கோரி உள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அரசு மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, திருமருகல் ஒன்றியத்தின் பனங்குடி பஞ்சாயத்தில் உள்ள புறம்போக்கை நீண்டகாலமாக அனுபவித்துக் கொண்டு வருகிறவர்கள் அதற்கு பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது ரெவின்யூ புறம்போக்கா அல்லது ஏரிப்புறம்போக்கா என்பதை குறித்தும் அந்தக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதற்கான சான்றுகள் என்னிடம் இப்போது இல்லையென்றாலும் அமைச்சர் விரும்பினால் கொண்டுவந்து காட்டுகிறேன், ஆகவே அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு பட்டா கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஏரி பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானது. பட்டா கொடுக்கிற உத்தேசமில்லை.

பொன்னமராவதி நகருக்குக் குடிதண்ணீர் வழங்கல்.

*வினா எண். 308 —திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி நகரில் குடி தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர் திட்டத்தின் ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப்பணிகள் முடிந்தபின் திட்ட உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அதற்கு அரசின் ஒப்புதல் பெற்று, குடிநீர்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப் படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்த ஆய்வானது கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலமாக தொடர்ந்து நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. எப்போது முடியும் என்று தெரியவில்லை. ஆகவே பொன்னமராவதி போன்ற பெரிய நகரங்களை— பேரூராட்சி மன்றங்களிலே குடிநீர் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் 4, 5 மைல்கள் நடந்து செல்லவேண்டிய அவலநிலைக்கு ஆளாக்கப்படுகிற நிலைமை இருக்கிறது, இதைக் கருத்திலே கொண்டு உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா? அமைச்சர் அவர்களே அங்கே நேரடியாக வந்து பார்வையிடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ரூ. 22 இலட்ச மதிப்பீட்டிலே பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர் திட்ட ஆய்வுப் பணிகளை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொன்னமராவதி பஞ்சாயத்து ஆய்வு மதிப்பீட்டிற்காக 5,500 ரூபாய் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17-தேதியில் செலுத்தியுள்ளது. மீதித்தொகை இன்னும் செலுத்த